ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2311/18 - 2022 දෙසැම්බර් මස 21 වැනි බදාදා - 2022.12.21
*2311/18 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்*

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்*

**ரணில் விக்கிரமசிங்ஹ ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சில் இருந்து,
கொழும்பு 01,
2022, திசெம்பர் 20.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் **"2022 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்"** என அழைக்கப்படுகின்றது.

2. இவ் ஒழுங்கு விதிகள் 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

3. 2022ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05ஆம் திகதிய 2300/12ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதிய 1739/3ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திரம் மற்றும் கொடுப்பனவு ஒழுங்கு விதிகள் இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகிறது.

3.1 மேலே குறிப்பிடப்பட்ட 2011ஆம் ஆண்டு 1ஆம் இலக்க விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திரம் மற்றும் கொடுப்பனவு ஒழுங்கு விதிகளில் IV **ஆவது உப அட்டவணைக்கு** கீழே விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பானவை இதன் மூலம் உள்ளடக்கப்படுகின்றது.

| இலக்கம் | தொகுதி | HS குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 23 | க்லய்பொஸேட் | 2931.39.10 |
| 24 | க்லய்பொஸேட் | 3808.93.20 |

4. ஏற்கனவே செய்யப்பட்ட திருத்தம், 2022ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

4.1 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் 2023ஆம் ஆண்டு யூன் மாதம் 21ஆம் திகதி வரையான காலப் பிரிவிற்குள்,**ஒருங்கிணைந்த வகைப்படுத்தப்பட்ட குறியீட்டு இலக்கத் தலைப்பு 31.02, 31.03, 31.04 மற்றும் 31.05** இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கீழ்க் காணப்படும் பொருட்கள், அவ்வாறான பொருட்கள் இலங்கை துறைமுகத்தையோ / விமான நிலையத்தையோ வந்தடைய முன்னர் விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ் திறந்த கணக்கு/பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் பணம் செலுத்துதல் எனும் அடிப்படையில் போன்ற கொடுப்பனவு முறையின் கீழ் இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்படும்.

| | நிரல I<br>**ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு** | நிரல் II<br>**ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு** | | நிரல் III<br>**விபரம்** | நிரல IV<br>**திறந்த கணக்கு/ பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துதல் அடிப்படைக்காக அனுமதி உள்ளது.** (OAP) |
|---|---|---|---|---|---|
| 01 | 31.02 | | | **நைதரசனின் கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள்.** | |
| | | 3102.10.00 | - | யூரியா, நீரிலிக் கரைசலிலான அல்லது நீரிலிக் கரைசலில் அல்லாதவை | OAP |
| | | | - | அமோனியம் சல்பேற்று, அமோனியம் சல்பேற்றினதும் அமோனியம் நைத்திரேற்றினதும் கலவைகளும் இரட்டை உப்புக்களும் : | |
| | | 3102.21.00 | -- | அமோனியம் சல்பேற்று | OAP |
| | | 3102.29.00 | -- | பிற | OAP |

| | நிரல I ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு | நிரல் II ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு | | நிரல் III விபரம் | நிரல IV திறந்த கணக்கு/ பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துதல் அடிப்படைக்காக அனுமதி உள்ளது. (OAP) |
|---|---|---|---|---|---|
| | | 3102.30.00 | - | அமோனியம் நைத்திரேற்று, நீரிலிக் கரைசலிலான அல்லது நீரிலிக் கரைசலில் அல்லாதவை | OAP |
| | | 3102.40.00 | - | கல்சியம் காபனேற்றுடன் அல்லது பிற அசேதன வளமாக்கியல்லாத பொருட்களுடனான அமோனியம் நைத்திரேற்றின் கலவைகள் | OAP |
| | | 3102.50.00 | - | சோடியம் நைத்திரேற்று | OAP |
| | | 3102.60.00 | - | கல்சியம் நைத்திரேற்றினதும் அமோனியம் நைத் திரேற்றினதும் கலவைகளும் இரட்டை உப்புகளும் | OAP |
| | | 3102.80.00 | - | யூரியாவினதும் அமோனியம் நைத்திரேற்றினதும் கலவைகள், நீர் கரைசலில் அல்லது அமோனியாக் கரைசலிலானவை | OAP |
| | | 3102.90.00 | - | பிற, முந்திய உப தலைப்புகளின் குறிப்பிடப்படாத கலவைகள் உள்ளடங்கியவை | OAP |
| | | | | | |
| 02 | 31.03 | | | **கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள், பொசுப்பாற்றிக்** | |
| | | | - | மேற்பொசுப்பேற்றுகள்: | |
| | | 3103.11.00 | - | நிறையளவில் 35% விகிதம் அல்லது அதற்கு மேற்பட்ட இரு பொஸ்பரஸ் பென்ராஒக்சைட்டுகளைக் ($P_2O_5$) கொண்டிருப்பவை | OAP |
| | | 3103.19.00 | -- | பிற | OAP |
| | | 3103.90.00 | - | பிற | OAP |
| | | | | | |
| 03 | 31.04 | | | **கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள், பொற்றாசிக்** | |
| | | 3104.20.00 | - | பொற்றாசியம் குளோரைட்டு | OAP |
| | | 3104.30.00 | - | பொற்றாசியம் சல்பேற்று | OAP |
| | | 3104.90.00 | - | பிற | OAP |
| | | | | | |

| | நிரல I ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு | நிரல் II ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீடு | | நிரல் III விபரம் | நிரல IV திறந்த கணக்கு/ பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துதல் அடிப்படைக்காக அனுமதி உள்ளது. (OAP) |
|---|---|---|---|---|---|
| 04 | 31.05 | | | **வளமாக்கி மூலங்களான நைதரசன், பொசுபரசு. பொற்றாசியம் என்பவற்றில் இரண்டு மூன்றினைக் கொண்டிருக்கும் கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள், பிற வளமாக்கிகள் மொத்த நிறை 10 கி.கி இற்கு மேற்படாத பொதிகளில் அல்லது வில்லைகளில் அல்லது அது போன்ற வடிவங்களில் இடப்பட்ட இவ்வதிகாரத்தில் உள்ள பொருட்கள்.** | |
| | | 3105.10.00 | - | மொத்த நிறை 10 கி.கி இற்கு மேற்படாத பொதிகளில் அல்லது வில்லைகளில் அல்லது அது போன்ற வடிவங்களில் இடப்பட்ட இவ்வதிகாரத்தில் உள்ள பொருட்கள் | OAP |
| | | 3105.20.00 | - | நைதரசன், பொசுபரசு, பொற்றாசியம் ஆகிய மூன்று வளமாக்கி மூலகங்களைக் கொண்ட கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள் | OAP |
| | | 3105.30.00 | - | இரு அமோனியம் ஐதரசனோர்த்தோபொசுபேற்று (இரு அமோனியம் பொசுபேற்று) | OAP |
| | | 3105.40.00 | - | அமோனியம் இரு ஐதரோசெனோதோபொஸ்பேற்று (மொனோ அமோனியம் பொசுபேற்று) மற்றும் இரு அமோனியம் இரு ஐதரோசெனோதோபொஸ்பேற்றுடனான (இரு அமோனியம் பொஸ்பேற்று) கலப்புகள் | OAP |
| | | | - | நைதரசன், பொசுபரசு ஆகிய இரண்டு வளமாக்கி மூலகங்களைக் கொண்ட வேறு கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள்: | |
| | | 3105.51.00 | -- | நைத்திரேற்றுக்களையும், பொசுபேற்றுகளையும் கொண்டவை | OAP |
| | | 3105.59.00 | -- | பிற | OAP |
| | | 3105.60.00 | - | பொசுபரசு, பொற்றாசியம் ஆகிய இரண்டு வளமாக்கி மூலகங்களை கொண்ட கனிப்பொருள் அல்லது இரசாயன வளமாக்கிகள் | OAP |
| | | 3105.90.00 | - | பிற | OAP |

*4.2* ***கோழித் தீவனம் (HS 1005.90.00)*** உற்பத்திக்குத் தேவையான மக்காச்சோளம், பொருட்களை விற்பனை செய்த பிறகு திறந்த கணக்கு /ரொக்கமாக செலுத்துதல் அடிப்படையில் ;

i *2022ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16ஆம் திகதிய 2297/79ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டு 15ஆம் திகதிய இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இலக்கம் 5 ஒழுங்கு விதியினால் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதன் பிரகாரம் அப்பொருட்கள் இலங்கைத் துறைமுகம்/விமான நிலையத்தையோ வந்தடைய முன்னர் விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில், பதிவு செய்யப்பட்ட கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் மூலம் இறக்குமதி செய்வதற்காக,2023ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 திகதி வரை நீடிக்கப்படுகின்றது.*

ii *மேலே ஒழுங்கு விதி இலக்கம் 4.2(i)இல் குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள் தவிர்ந்த எந்தவொரு இறக்குமதியாளர் மூலமும், 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 தொடக்கம் 2023ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆம் திகதி வரையான காலப் பிரிவிற்குள்,அப்பொருட்கள் இலங்கைத் துறைமுகம்/ விமான நிலையத்தையோ வந்தடைய முன்னர் விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ் இறக்குமதி செய்வதற்காக இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகின்றது.*

4.3 *இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் மேலே இலக்கம் 4.2(i)மற்றும்(ii)ஒழுங்கு விதியில் மோசடி செய்யப்படுகின்ற எந்தவொரு இறக்குமதி தொடர்பாகவும் விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.*

5. *இவ் ஒழுங்கு விதிகள் வினைதிறன் மிக்க வகையில் செயற்படுவதனை நோக்காகக் கொண்டு முன்னிட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுதிக் கட்டுப்பாட்டு நாயகத்தின் மூலம் இலங்கைச் சுங்கம் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற வங்கிக்குத் தேவையான செயற்பாட்டு ஆலோசனைகள் வழங்கப்படும்.*

EOG 12 - 350